**சிலாபம் பிளான்டேசன் லிமிடட் - 2018**

---

## 1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் பிளான்டேசன் லிமிடட்டின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து பூர்த்தி செய்யப்பட்ட ஆனால் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 72,942,879 கிரயமான 94 வாகனங்கள் மீள மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்குச் சொந்தமான தற்பொழுது பெறுமானத்தேய்வு செய்து பூர்த்தி செய்யப்பட்ட ஆனால் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற அனைத்து மோட்டார் வாகனங்களையும் மீண்டும் பெறுமதியிட்டு பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கை | நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தற்பொழுது வரை சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான ஆரம்ப தொழிற்படு மூலதன வேலைப் பெறுமதியில் பிழையாக உள்ளடக்கப்பட்டிருந்த முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 1,111,531 தொகையான செலவுகளை சரி செய்யும் போது மீளாய்வாண்டிற்கான செலவுகளாகப் பதிவு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அப்பெறுமதியினால் குறைத்து பதியப்பட்டிருந்தது. | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பளுகஸ்வெவ தோட்டத்தின் ஐந்தொகையில் இந்த ரூபா 1,111,531 பெறுமதி நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் தோட்டத்தின் இறுதிக் கணக்குகளிலும் அவ்வாறே காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டிற்கான இலாபத்திற்கு செம்மையாக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 1994 இலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக தோட்ட ஊழியர்கள் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் (Plantionon Human Develpement Trust Fund) நிர்மாணிக்கப்பட்ட ரூபா 6,479,676 பெறுமதியான சொத்துக்களுக்குரிய விபரமான பதிவேட்டை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது. | PHDT நிதியத்திலிருந்து கம்பனிக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் மானிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு கம்பனியின் பங்களிப்புடன் உரிய ஆண்டின் போது சொத்துக்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம், மற்றும் நீர்வழங்கல் தனித்தனியாகக் காட்டப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தின் பங்களிப்பும் PHDT நிதியத்திதிலிருந்து கிடைத்த பங்களிப்பும் சேர்த்து நிர்மாணிக்கப்பட்டுள்ளதன் காரணமாக மானியமாகக் கிடைத்துள்ள ரூபா 10,824,468 என்ற பெறுமதி நிர்மாணிக்கப்பட்ட | PHDT நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வு செலவுக்குச் சமமான தொகை உரிய ஒதுக்கத்திலிருந்து ஆண்டிற்கான வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதனால் அந்த நிதியத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட செலவுத்துகளை தனியாக இனங்காணக்கூடிய வகையில் விபரமான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

சொத்துக்களின் பெறுமதிக்கு சமனானதல்ல. அதற்கினங்க கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 6,479,676.000 தொகையான சொத்துக்களும் 1994 – 2010 காலப்பகுதியில் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2000 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை. | படிகளைத் தீர்மானிக்கும் போது தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் சிபார்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இல்லாது JM மற்றும் அதற்கு மேற்பட்ட சம்பளத் தொகுதியின் 28 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 7,740,249 தொகை “வேலையாட்கள் படியாக” (Labour Allowance) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் மூலம் அனைத்து பிரதேச செயலகங்களின் நிறைவேற்று தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வேலையாட்கள் படி செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு அதற்கிணங்க நிறைவேற்று உத்தியோகத்தருக்கு இப்படிகளைச் செலுத்துதல் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளது. | படிகளைச் செலுத்துவதற்கு முன்னர் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்த எரிபொருள் படிகள் போதியதாக இல்லாத விசேட சந்தர்ப்பங்களில் தலைவரால் மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட | இது தொடர்பாக பணிப்பாளர்கள் சபையின் சிபார்சு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த அங்கீகாரத்திற்காக அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | தலைவரால் மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருளுக்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எரிபொருளுக்காக வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் தலைவரால் அங்கீகரித்த எரிபொருளை மிகைத்து பயன்படுத்திய ரூபா 413,374 பெறுமதியான 3,082 லீற்றர் எரிபொருளுக்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

**1.7 பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டில் எல்கடுவ பெருந்தோட்ட கம்பனிக்கு மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு, இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு, இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்கு அரசாங்க வளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு 8 சதவீத வட்டியின் கீழ் இரண்டு ஆண்டுகளில் செலுத்தி முடிவுறுத்தும் வகையில் வழங்கப்பட்ட ரூபா 105,000,000 தொகையான கடனையும் ரூபா 53,157,808 தொகையான வட்டியையும் அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு செயலாளரால் உரிய நிறுவன தலைவரிடமிருந்து அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உரிய கடன் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை தான் பெற்றுக்கொண்ட ரூபா 40 மில்லியன் கடன் பணத்தை தீர்த்து வைக்கும் கட்டமாக சிலாபம் பெருந்தோட்ட கம்பனியின் கொழும்பு அலுவலகத்தை பேணுவதற்கு பொருத்தமான கட்டிட வளவை வழங்குவதற்கு பெற்றுக்கொள்வதற்கு இணக்கப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இத் திகதிகளில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. | உரிய கடன் பணத்தையும் வட்டியையும் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 35,178,696 நட்டமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 126,414,733 ஆக இருந்தன் காரணமாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 161,593,429 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த வீழ்ச்சிக்கு தேங்காய் விற்பனை வருமானம் ரூபா 200,668,747 ஆல் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டின் போது தோற்றுவிக்கப்பட்ட ரூபா 6,062,657 பெறுமதியான எண்னை வடிக்கும் முறைமையின் மூலம் உடன்படிக்கையின் பிரகாரம் 01 கிலோகிராம் கொப்பராவிலிருந்து 0.6 கிலோகிராம் எண்ணை உற்பத்தி செய்யக் கூடியதாக இருந்த போதிலும் அந்த முறைமையின் மூலம் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தது 0.5 கிலோ கிராம் மாத்திரமாகும். அதற்கிணங்க உரிய முறைமையை திருத்தம் செய்வதற்கு அல்லது உடன்படிக்கையை இரத்துச் செய்து வேறு ஒரு முறைமையை தோற்றுவிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்காது செலுத்த வேண்டியுள்ள பணத்தை இரத்துச் செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் எண்ணை வடிக்கும் முறைமையிலிருந்து எதிர்பார்த்த உற்பத்தி வெளியீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பொது முகாமையாளர் (பெருந்தோட்டம்) பதவிக்கு கம்பனியின் அனைத்து தோட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2014 நவம்பர் 18 ஆந் திகதி அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரின் சேவை 02 தோட்டங்களுக்கும் ஒரு செயற்திட்டத்திற்கும் மாத்திரம் மட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முகாமைத்துவ தீர்மானத்தின் காரணமாக அப்பதவியின் சேவை குறைந்த பயன்பாட்டிற்கு | 2015 செப்தெம்பர் 08 மற்றும் 2016 பெப்ரவரி 11 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நிறைவேற்றுப் பணிப்பாளரின் 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பளுகஸ்வெவ மற்றும் தம்பன்னி ஆகிய தோட்டப் பகுதிகளையும் மரமுந்திரிகை செயற்திட்டங்களையும் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு பெருந்தோட்ட | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க உதவி பொது முகாமையாளர் (பொருந்தோட்டம்) பதவிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் அனைத்து தோட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உட்பட்டிருந்தது. | உதவி பொது முகாமையாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. | |
| (இ) | கம்பனியால் கினியம தோட்டப்பகுதியில் பராமரிக்கப்படும் விதைத் தேங்காய் பூங்காவிற்கு நீரினைப் பெற்றுக்கொள்வதற்கு 2018 மார்ச் 19 ஆந் திகதி ரூபா 1,386,929 கிரயத்திற்கு மின் பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் நீர் குழாய்களைப் பதிக்கும் நடவடிக்கை 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை முடிவுறுத்தப்படாததன் காரணமாக அந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த விதைத் தேங்காய் பூங்கா முழுமையாக தென்னை ஆராய்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட தோட்டமாகும். நீர் வழங்கலுக்காக மின் பிறப்பாக்கி பெறப்பட்டிருந்தும் நீர் குழாய்களைப் பதித்தல் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் தற்பொழுது அந்த நீர்க்குழாய்களைப் பதித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | செயற்பாடுகளை நிறைவேற்றும் ஒழுங்குமுறைக்கு இணங்க பொருட்களைக் கொள்வனவு செய்தலும் பயன்படுத்தலும் இடம்பெறுதல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டுவரை கம்பனியின் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு காணப்பட்ட 145,549 முதிர்ச்சிடையாத தென்னைப் பயிர்ச்செய்கையின் மேற்பார்வை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட பலவீனங்களின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை 48,579 மரங்கள் அதாவது 34 சதவீதம் அழிவடைந்து காணப்பட்டது. | பயிர்கள் அழிவடைதல் நீர் பற்றாக்குறையினால் மாத்திரம் இடம்பெறாததுடன் கிருமிகள் பாதிப்பு காலநிலை மாற்றம் சுற்றாடல் நிலைமை மண்ணின் தண்மை என்பவற்றின் கீழும் இடம்பெறுகின்றது. | பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதிலிருந்து முதிர்ச்சியடையும் வரை அப் பயிர்ச்செய்கையின் முன்னேற்றத்திற்கு தேவைாயன அனைத்து காரணிகளையும் நிர்ணயிக்கப்பட்டவாறு கிடைக்கும் வகையில் பயிர்ச்செய்கையை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிங்கிரிய மற்றும் சிலாபம் தோடங்களில் நேரடிப் பசளை இடுதல் இடம்பெற்றிருந்ததுடன் அதற்கிணங்க தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபார்சுக்கு இணங்க முதிர்ச்சியடைந்த ஒரு தென்னை மரத்திற்கு 800 கிராம் யூரியா | பசளைகளை மதிப்பீடு செய்தலானது கடந்த ஆண்டுகளில் தோட்டங்களின் ஆவண பகுப்பாய்வின் மூலம் தென்னை ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற | தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபார்சுகளுக்கு இணங்க ஒவ்வொரு மரத்திற்கும் சமமான வகையில் பசளை ஈடுபடுத்துவதன் மூலம் விளைச்சலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் தோட்ட முகாமைத்துவத்தினால் ஒரு மாதத்திற்கு 800 கிராமிற்கும் 1200 கிராமிற்கும் இடைப்பட்ட அளவில் ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக 51,052 கிலோகிராம் அளவான யூரியா ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவினை விட மிகையாக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | உடனடி பசளை சிபார்சுகளுக்கு இணங்க இடம்பெறுவதனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதியில் வித்தியாசம் உள்ளது. | |
| (இ) | தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபார்சின் பிரகாரம் இரசாயனப் பசளை ஈடுபடுத்தப்படுகின்ற ஒவ்வொரு முதிர்ச்சியடைந்த மரத்திற்குமாக 01 கிலோகிராம் டொலமயிட் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 119,788 மரங்களுக்கு 2 கிலோகிராம் வீதம் ஈபடுத்தியதன் காரணமாக 116,280 கிலோக்கிராம் டொலமயிட் அங்கீகரிக்கப்பட்ட அளவை விட மிகையாக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் மண் மற்றும் தென்னை ஓலைகளைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் சிபார்சு செய்யப்படுகின்ற உடனடிபசளை சிபார்சின் அடிப்படையில் சில தோட்டங்களுக்காக 2 கிலோக்கிராம் டொலமயிட் வீதம் ஈடுபடுத்தப்படுதல் இடம்பெற்றுள்ளது. நாற்றுக்களைப் பயிரிடுவதற்கு 8,535 கிலோகிராம் பசளை குறைத்து ஈடுபடுத்தும் வித்தியாசமானது பசளை ஈடுபத்தும் சந்தர்ப்பத்தில் நாற்றுக்கள் இறந்தமை, வளராத நாற்றுக்கள் காணப்பட்டமை ஆகிய காரணிகளின் அடிப்படையில் இடம்பெற்றிருக்கலாம். | ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபார்சு செய்த அளவில் டொலமயிட் பசளையை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவிற்கு இணங்க ஒரு தென்னை மரத்தின் வருடாந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சல் 72 தேங்காய்களாக இருக்க வேண்டிய போதிலும் கம்பனியால் விளைச்சலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நிருவகிக்கப்படுகின்ற 06 தோட்டங்களில் அப்பெறுமதி 11 இற்கும் 36 இற்கும் இடைப்பட்ட மிகவும் குறைந்த வீச்சில் காணப்பட்டது. | ஒரு தென்னை மரத்தின் வருடாந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சல் 72 தேங்காய்கள் அல்லாததுடன் கம்பனியின் 2018 ஆம் ஆண்டிற்கான தேங்காய் விளைச்சல் குறைவடைதலானது ஒரு மரத்தின் வருடாந்த சராசரி விளைச்சல் குறைவடைந்தமைக்கு தாக்கம் அளித்துள்ளது. | கம்பனியால் ஒரு மரத்திலிருந்து ஆகக்குறைந்தது 72 தேங்காய்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தென்னைப் பயிர்ச்செய்கையைப் பேணுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2013 ஆம் ஆண்டில் புனித | உருவாக்கப்பட்ட | மரமுந்திரிகைப் |

| | | | |
|---|---|---|---|
| | ஜோன் பீ மற்றும் மறிச்சிகட்டுவ தோட்டங்களில் 20.75 ஹெக்டயர்களில் 4,131 மரமுந்திரிகை நாற்றுக்களைப் பயிரிட்டு அதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 7,058,205 செலவு செய்திருந்தபோதிலும் பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளின் பலவீனத்தின் காரணமாக ஒட்டுமொத்த பயிர்ச்செய்கையில் 3685 மரங்கள் அதாவது 89 சதவீதம் அழிவடைந்திருந்தன. | மரமுந்திரிகைப் பயிர்செய்கையும் அதிக மழைவீழ்ச்சி ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் நீரினால் மூடப்பட்டிருந்ததன் காரணமாகவும் உலர் வலயத்தில் அமைந்துள்ளதன் காரணமாகவும் ஏற்பட்ட வரட்சியான நிலைமையாலும் இப் பயிர்கள் சேததடைந்துள்ளன. | பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணப்பட வேண்டிய மண் மற்றும் சுற்றாடல் காரணிகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட வேண்டியதுடன் பயிரிடப்பட்ட நாற்றுக்களை பாதுகாப்பதற்காக பயிர் கண்காணிப்பு நடவடிக்கைகளை செயற்திறனாகப் பேணுதல் வேண்டும். |
| (ஊ) | கம்பனியும் தென்னை ஆராய்ச்சி நிறுவனமும் ஒருங்கிணைந்து 2012 ஆம் ஆண்டின் போது பிங்கிரிய தோட்டத்தில் 58 ஹெக்டயர்களில் 8,363 நாற்றுக்களுடனான தென்னைப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்திருந்தும் பயிர்ச்செய்கை நடவடிக்கையின் மேற்பார்வையில் காணப்பட்ட பலவீனத்தின் காரணமாக 2691 நாற்றுக்கள் அதாவது 32 சதவீதம் அளவானவை மீளாய்வாண்டின் இறுதியளவில் அழிவடைந்திருந்தது. | குறைந்த மழைவீச்சி கிடைக்கும் நிலைமையின் கீழ் அதிகளவான பயிரிச்செய்கையை, நாளாந்தம் பராமரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ள மனித வளங்கள் பற்றாக்குறை, நாற்றுக்கள் சிறிய காலத்தில் கறையான், முள்ளம்பன்றி மற்றும் வண்டுகளால் ஏற்படும் பாதிப்புக்களால் தென்னை நாற்றுக்களின் அளவு குறைவடைவதற்கு தாக்கமளித்துள்ளது. | தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து கிடைத்த ஆலோசனைகளின் பிரகாரம் பயிர்ச்செய்கையை கண்காணித்து பராமரித்தல் வேண்டும். |

### 3.4 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்குச் சொந்தமான பிங்கிரிய தோட்டத்தில் அமைந்துள்ள மாகாண மாரவில II குளத்தை புனரமைத்தல் மற்றும் அதன் மூலம் அகற்றப்படுகின்ற 35,000 கியூப் சேற்று மண்ணை ஒரு கியூப் ரூபா 1,800 வீதம் கம்பனிக்குச் செலுத்தி அகற்றுவதற்காக மீளாய்வாண்டின் சனவரி 11 ஆந் திகதி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தும் உடன்படிக்கை செய்துகொண்டவர் சேற்று | ஒப்பந்தக்காரர் 2018/01/11 ஆந் திகதி மாரவில் II குளத்தை புனரமைப்பதற்காக பதிவு செய்த 1359 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் ரூபா 63 மில்லியனை சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கு பணமாகச் செலுத்துவதற்குரிய 09 மாதங்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தும் | கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அகற்றப்பட்ட சேற்று மண்ணிற்காக பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது சேற்று மண் அகழ்வதனை நிறுத்துவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மண்ணை அகற்றியிருந்தும் அதற்குரிய பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது சேற்று மண் அகற்றுவதனை நிறுத்துவதற்கு கம்பனி சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஒப்பந்தகாரர் அகழ்வு நடவடிக்கையை ஆரம்பித்திருக்காததுடன் உடன்படிக்கைகளுக்குரிய செயலாற்றல் பிணைப் பணத்தையும் செலுத்தியிருக்கவில்லை. எனினும் ஒப்பந்தக் கம்பனியானது எதிர்பார்த்த மதிப்பீட்டினைவிட மிகையான பெறுமதியினை கம்பனிக்குச் செலுத்துவதற்கு இணங்கியிருந்ததனால் ரூபா 1,000,000 தொகையான செயலாற்றல் பிணைப்பணத்தை 04 தவணைகளில் செலுத்துமாறும் 28 நாட்கள் சலுகை காலத்தை உள்ளடக்கி 2018/07/25 ஆந் திகதி இரண்டு தரப்பினர்களாலும் மீண்டும் கையெழுத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் செல்லுபடியாகும் காலம் 2018.08.23 ஆந் திகதி முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டதனால் 2018/07/28 ஆந் திகதி 83 கியூப் மண்ணிற்காக ரூபா 149,400 பணம் பிங்கிரிய தோட்ட அலுவலகத்திற்கு செலுத்தி ஒரு கியூப் களிமண் மாத்திரம் குளத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியால் வருடாந்தம் போகம் முறைமையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்ட ருவன்எலிய வயல்காணிகளுக்கு மத்தியில் சிலாபம் பெருந்தோட்ட கம்பனியால் பயன்படுத்தப்பட்டு வந்த இக்குளம் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமானது எனவும் அதில் அங்கீகாரமின்றி அகழ்கின்ற தரப்பினர்களை அச் செயற்பாடுகளிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்காக

| | | | |
|---|---|---|---|
| | | தடைசெய்தல் கட்டளையைப் பெற்றுக்கொள்வதற்காக 1023/L ஆம் இலக்க வழக்கின் கீழ் குளியாபிட்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சிலாபம் தோட்டத்திற்குச் சொந்தமான மாவத்தகம தோட்டத்தின் ஒரு பகுதியில் 140 ஏக்கர்கள் அளவில் அமைந்துள்ள கருங்கற்கள் 2012 ஆம் ஆண்டிலிருந்து அதிகாரமற்ற நபர்களால் அகழ்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கம்பனியால் அந்த அதிகாரமற்ற அகழ்தலை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019/08/23 ஆந் திகதி கம்பனியால் தெரிவு செய்யப்பட்ட உத்தரவு பெற்ற நில அளவையாளர்களால் காணிகளை அளவீடு செய்தல் அடுத்துவரும் 14 நாட்களுக்குள் மேற்கொள்ளப்படும். மேலும் எல்லைகள் நிர்ணிக்கப்பட்டதன் பின்னர் கருங்கற்கள் சம்பந்தமான தொழிழல்நுட்ப தரவுகளை உள்ளடக்கிய ஒரு அறிக்கையைத் தயாரித்து அதற்கிணங்க கருங்கற்களை உடைப்பதற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு பெறுகைகள் கோருதல் இடம்பெறுவதாகவும் மேலும் தெரிவிக்கிறேன். | கம்பனிக்குச் சொந்தமான காணிகளை அளவீடு செய்து அதற்கிணங்க வேலி எல்லைகளைப் பேண வேண்டியதுடன் உத்தரவற்ற கைப்பற்றுதல்கள் மற்றும் செயற்பாடுகளை வெளிப்பளிப்படுத்தும் வகையில் தோட்ட மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | 1992 ஆம் ஆண்டில் கம்பனி ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒப்படைக்கப்பட்ட ரூபா 142,502,287 பெறுமதியான 5,733 ஹெக்டயர் காணிகளில் 187.44 ஹெக்டயர் காணிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை வெளித்தரப்பினர்களால் கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் அக் காணிகளுக்குரிய திட்ட வரைபடங்கள் கம்பனியிடம் இல்லாததன் காரணமாக உரிமையை தெளிவாகச் சமர்பித்து அத்து மீறிய கைப்பற்றுதல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | 18.21 ஹெக்டயர் அளவானவை காணிப்பதிவேடு நாளதுவரையாக்கப்படாமையின் காரணமாக தவிர்க்கப்பட்டிருந்தது.<br><br>27.92 ஹெக்டயர் அளவானவற்றில் 2001 ஆம் ஆண்டின் போது விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் தற்பொழுது அரசாங்கத்தின் தலையீட்டின் அடிப்படையில் அதில் வீடமைப்புத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.<br><br>11.34 ஹெக்டயர் அளவான காணியின் 1978 ஆம் ஆண்டின் போது குத்தகை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் | கம்பனிக்குச் சொந்தமான அளவை செய்யப்படாத காணிகளை அளவை செய்து அதற்கிணங்க எல்லைகளை குறித்துக்கொள்ள வேண்டியதுடன் அத்துமீறிய கைப்பற்றுதல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | குத்தகை விவசாயிகளுக்கு உரிமையாகியிருத்தல்.<br><br>குத்தகை உடன்படிக்கைக்கு இணங்கி இத்தோட்டம் 149.49 ஹெக்டயராக பதியப்பட்டிருந்தபோதிலும் மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டிருந்ததானது 23.47 ஹெக்டர்களாகும். வொயிஸ் ஒப் அமெரிக்காவிற்கு இந்த காணி வழங்கப்பட்டிருந்தும் அந்த அளவு மற்றும் வழங்கப்பட்டுள்ள காலம் தொடர்பாக எழுத்துமூலச் சான்றுகளை தேடிக்கண்டுபிடிக்க முடியாதிருந்தது.<br><br>1984 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட அரசாங்கத்தினால் 81.25 ஹெக்டயர் காணி இடம்பெயர்ந்தவர்கள் குடியிருப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அது தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் காணப்படவில்லை.<br><br>சித்தம்பலம்வத்தை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழ் காணப்பட்ட காலத்தின் போது இக் காணிகள் இழுக்கப்பட்டிருந்தது. இதற்காக எழுத்துமூல சான்றுகள் காணப்பட்டிருக்கவில்லை. | |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 11,731,343 பெறுமதியான 04 நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருக்காததுடன் திட்டத்தில் உள்ளடக்கப்படாத லொறி கொள்வனவு செய்தல், மரங்களை மதிப்பீடு செய்தல், பொருட்களைக் கொள்வனவு செய்தல் என்பற்றிற்காக ரூபா 21,477,313 செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க பெறுகைத் திட்டத்திற்கு இணங்க கம்பனி | 2018 இல் தேங்காய் விலை வீழ்ச்சியடைதல் மற்றும் விளைச்சல் குறைவடைவதன் அடிப்படையில் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிர்மாணங்கள் இடம்பெற்றிருக்கவில்லை. எனினும் ரூபா 21,477,313 தொகையான பெறுகை | அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வேலைகள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்தல் இடம்பெற வேண்டியதுடன் திட்மிடப்படாத செற்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் |

| | | |
|---|---|---|
| செய்றபட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை மீளாய்வாண்டில் மேற்கொள்ளும் போது பல ஆண்டிற்கான மதிப்பீட்டிலுள்ள நிதி ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இடம்பெற்றிருந்த போதிலும் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகைத் திட்டத்தை நாளதுவரையாக்கி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 2017 யூலை 25 ஆந் திகதி ரூபா 173,000 செலவு செய்து பகிரங்கமான பத்திரிகை அறிவித்தலின் மூலம் கணக்காய்வு உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் அந்த ஆட்சேர்ப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. | 2017 யூன் 25 ஆந் திகதிய பத்திரிகை அறிவித்தலுக்கு இணங்கி உரிய நியமனங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததனால் அக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் 2018 ஆம் ஆண்டின் போது தோட்ட பதவியணியினருக்கு நியமிக்கப்பட்ட 06 ஊழியர்கள் தலைமை அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர் | தகமையுள்ள விண்ணப்பதாரர்களை உரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |